## ஒரே ஒரு வழி

இந்த சூழ்நிலையில்தான், பாவமற்றவரும், சர்வவல்லவரும் அன்பு நிறைந்த வருமான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் முக்கியத்துவம் பெறுகிறார். பாவத்தின் அடிமைத்தனத்தினின்று நமக்கு சுதந்திரம் அளிப்பதற்காகத்தான், உண்மையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனிதனாக பூமியிலே பிறப்பதற்கு முன்னமே, தேவ தூதர் "அவர் மனிதர்களை பாவத்தினின்று விடுவிப்பவரானதால் அவருக்கு '**இயேசு**' என்று பெயர் சூட்ட வேண்டும்" என்று கூறினார். '**இயேசு**' என்பதற்கு பாவிகளின் இரட்சகர் என்று பொருள்.

ஆம், இயேசுவானவர் மனித இரட்சகராகத்தான் இவ்வுலகிற்கு வந்தார். பாவத்தின் அடிமைத்தனத்தினின்று நம்மை விடுதலையாக்கும் இரட்சகர். நமது பாவத்தின் சம்பளமாகிய மரணத்தைத்தான் அவர் சிலுவையிலே சுமந்தார். இந்த தேவ குமாரனை நாம் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், எஜமானாக இருதயத்திற்குள் வரும்படி அழைக்கவும் வேண்டும். அப்பொழுது பாவத்தின் தண்டனையிலிருந்து ஒரு பெரிய விடுதலையை நாம் உடனே பெற்றுக் கொள்ளுவோம்.

## ஒரே இரட்சகர்

பாவத்தின் அடிமைத்தனத்தினின்று நம்மை விடுதலையாக்க வேறொருவராலும் கூடாது. ஏனெனில், மனிதனுடைய பாவத்தின் விளைவு மரணம் என்பதை, இயேசு கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவை மரணத்தின் மூலம் நிரூபித்தார். அவ்வாறாக செய்தவர் ஒருவருமில்லை. அது மட்டுமல்ல, அடக்கம் பண்ணப்பட்ட மூன்றாம் நாள் இயேசு கிறிஸ்து, தாம் கூறியபடியே மரணத்தை வென்று உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு போகவும் செய்தார். எவராலும் ஆயத்தப்படுத்த முடியாத இந்த இரட்சிப்பின் வழியை ஏற்றுக்கொள்ளும் ஏவருக்கும், அந்த நொடிப் பொழுதிலேயே பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலை பெற முடியும்.


பிரியமான நண்பா, இந்த நிமிடமே இந்த இயேசுவை ஏற்றுக் கொள்வதில் உன்னை தடை செய்வது எது?

எல்லா மனிதர்களையும் போல நீங்களும் பாவத்திற்கு அடிமை என்பதை ஏற்றுக்கொண்டு, "பாவ கட்டுகளிலிருந்து என்னை விடுதலையாக்கத்தான் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தார், மீண்டும் உயிர்த்தெழுந்தார்" என்பதை மனப்பூர்வமாக உமது இருதயத்தில் ஏற்றுக்கொள்.

இந்தியா முழுவதும் சுதந்திரதினத்தை கொண்டாடும் இந்த வேளையில், பாவத்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை பெறுவீர்களாக. அவ்வாறு நீங்கள் உண்மையிலேயே முழுமையான சுதந்திரம் பெற எமது வாழ்த்துக்கள்.

மேலும் கூடுதலாக அறிந்துகொள்ள விரும்பினால் தொடர்பு கொள்க.






SATHGAMAYA
MEDIA FOUNDATION

# உண்மையாகவே நாம் சுதந்திரரா?



## உண்மையாகவே நாம் சுதந்திரரா?

தெருவெல்லாம் கொண்டாட்டங்களால் நிறைந்திருந்தது. பயங்கரமான கூட்டம், எங்கு பார்த்தாலும் திருவிழாக்கோலம். அங்கே தெருவோரத்தில் திடீரென ஒரு மேள சத்தம் ஒலித்தது. உடனே எல்லாரும் அந்த இடத்தை நோக்கி சென்றார்கள்.

அங்கே ஒரு குரங்கு வித்தைக்காரன் இருந்தான். அவன் கையில் ஒரு சிறு சங்கிலியை பிடித்துக் கொண்டிருந்தான். அதன் மறுமுனை ஒரு குரங்கின் கழுத்தில் மாட்டியிருந்தது. இனிமேல் தான் ஆட்டம் ஆரம்பம். . . .

அந்த குரங்கு விந்தைக்காரன் ஒரு விசேஷ விதமான தாளத்தை தன்னிடம் இருந்த வாத்தியத்தில் வாசிக்க ஆரம்பித்தான். . . . அந்த தாளம் உச்சத்தை எட்டின உடனே, ஆடு டா. . . ஆடு. . . ஆடு டா. . . என்று உரத்த குரலில் கூறினான். அதைக் கேட்ட உடனேயே அந்த குரங்கு நடனமாட ஆரம்பித்தது. சுற்றிலும் நிற்பவர்கள் தங்கள் கரங்களை தட்டியும் கூச்சலிட்டுக் குரங்கை உற்சாகப் படுத்தினார்கள். குரங்கும் மிக நன்றாக குதித்தும் தலைகீழாக உருண்டு கொண்டும், நடனமாடிக் கொண்டிருந்தது.

அனால் அதின் கண்களில் துக்கம் நிழலிடுகிறதோ? என்று சிலராகிலும் சந்தேகித்திருப்பார்கள்.

எவ்வளவுதான் கைதட்டல் கிடைத்தாலும் நான் ஒர் அடிமைத்தானே. எஜமானனின் தாளத்திற்கேற்ப நான் குதித்துத்தானே ஆக வேண்டும். . . . கழுத்தில் சங்கிலி மாட்டி இருக்கிறதே. இப்படி ஒரு சிந்தனை குரங்கின் உள்ளத்தில் வந்திருக்குமோ? இல்லை, அதற்கு வாய்ப்பே இல்லை, ஏனென்றால் அது ஒரு சாதாரண மிருகம் தானே. . . .

ஆனால் மனிதனின் கதை வேறு. எவ்விதமான அடிமைத்தனத்தையும் அவன், அங்கீகரிப்பவனல்ல, ஆனால் ஒன்றை மட்டும் கேட்கிறேன், சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று பல்லாண்டுகளாக சத்தமிட்டு கூறி வந்தாலும், நாம் முழுமையான சுதந்திரம் அடைந்திருக்கிறோமா? அல்லது, நாம் இன்னமும் எதெதற்கோ, எல்லாம் அடிமைகளாக இருக்கிறோமா? இந்த கேள்விகளுக்கான பதில் நம்மை வேதனைக்குள்ளாக்கும் என்பது தெரியும்.

"ஓர் அடிமையாய் வாழ்வதை விட சாவதே மேல்" என்றுதான் பொதுவாக மனிதர்கள் கூறுவார்கள். மானமுள்ளவர்கள் அவ்வாறாகத்தான் கூறமுடியும். ஏனெனில், அந்நியர்களின் விருப்பத்திற்கேற்ப எல்லாம் வளைந்து கொடுத்து வாழ, சுதந்திரமாக யோசிக்கவும், திட்டமிடவும் திறமையுள்ள மனிதன் ஒருபொழுதும் விரும்புவதில்லை. ஓர் இயந்திர மனிதனாகவோ, மர பொம்மையாகவோ நாம் முன்னே பார்த்த குரங்காகவோ இருக்க மனிதன் ஒருபோதும் விரும்புவதில்லை.

## தூக்கியெறிந்த அடிமை நுகம்

ஆங்கிலேயர் நமது தோளில் சுமத்தியிருந்த நுகத்தை தூக்கியெறிய நமது முன்னோர்கள் தீரமாய் போராடினார்கள். அதற்குத்தானே அகிம்சை உள்ளிட்ட பல வழிகளிலூடே போராட்டங்களை முன்னின்று நடத்தினார்கள். மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திரபோஸ் போன்ற மகான்களை நாம் மிகுந்த மரியாதையுடன் நினைவு



கூறுகிறோம். பகத்சிங் போன்றவர்கள் வீரமுடன் இரத்தசாட்சிகளானார்கள். கடைசி மூச்சு வரையிலும் நம் நாட்டின் சுதந்திரம் அவர்களின் கனவுகளில் நிறைந்திருந்தது.

கடைசியாக, 1947 ஆகஸ்டு 14ஆம், நாள் நடு இரவில் டெல்லியிலுள்ள செங்கோட்டையில் நமது பெருமையின் அடையாளமான மூவர்ணகொடி உயரப் பறந்தது. அடுத்த நாள் கதிரவன் உதித்தது சுதந்திர இந்தியாவின் மீதுதான்.

மிகுந்த மரியாதையுடன் அந்த பெருமைமிக்க நல்ல நேரத்தை நாம் இப்போதும் நினைவு கூறுகிறோம், கொண்டாடுகிறோம். அரசியல் சுதந்திரத்தை நாம் எந்த அளவுக்கு விலை மதிக்கிறோம் என்பதின் அடையாளம்தான், இத்தனை வருடங்களான பிறகும் தொடரும் சுதந்திர தின கொண்டாட்டங்களும் எல்லாமே.

## உண்மையில் நாம் சுதந்திரரா?

அரசியல் ரீதியிலான விடுதலையினால் மட்டும் எல்லாவற்றையும் அடைந்து விட்டோமா? இல்லை என்பது நமக்கு தெரியும். அரசியல் சுதந்திரத்தோடு கூடவே நமக்கு சமுதாய ரீதியிலான சுதந்திரமும் வேண்டும், ஆனால் உண்மையில் நமக்கு வேண்டிய சுதந்திரம் மேலே கூறினவைகளையெல்லாம் விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது, அது நமது விருப்பத்திற்கேற்ப செயல்பட முடியாதபடி நம்மை அடிமைப்படுத்துகிற, நமக்குள்ளேயே இருக்கும் பாவ சுபாவத்திலிருந்து கிடைக்கிற சுதந்திரமாகும்.

நன்மை எது என்று அறியாததாலல்ல மனிதனுடைய பிரச்சனை அவன் விரும்புகிற நன்மையை செய்ய முடியாதபடி அவனுடைய சரீரம் அவனுடைய விருப்பத்திற்கு மாறாக செயற்படுகிறது என்பதுதான். ஒரு குறிப்பிட்ட இடத்தில் திருதராஷ்டிரன் இவ்வாறு புலம்புகிறார் "நன்மை எது என்பது எனக்கு தெரியும், அதை செய்யவேண்டும் என்று நான் விரும்பவும் செய்கிறேன்; ஆனால் அதை செய்ய என்னால் முடியவில்லையே" எல்லா மனிதர்களுடைய நிலைமையும் இவ்வாறாகத்தான் இருக்கிறது.

## நிர்பந்தமான மனிதன்

நன்மை செய்வதற்கான நமது விருப்பத்தை தோற்கடித்து, நம்மை கொண்டு தீமை செய்யும்படி தூண்டும் ஒரு வல்லமை நமக்குள்ளேயே இருக்கிறது. வேதாகமம் அதை பாவம் என்று அழைக்கிறது. பொறாமைப் படக்கூடாது, கோபப்படக்கூடாது, துன்மார்க்கமாக நடக்கக்கூடாது, செய்யக் கூடாததை ஒன்றுமே செய்துவிடக்கூடாது என்றெல்லாம் விரும்பும்போதே, அறியாமலேயே அவைகளையெல்லாம் செய்துவிடுகிறோம். கட்டுப்படுத்த முடியவில்லை. . . . அது நிர்பந்தமான ஒரு நிலைதானே? அப்படியானால் நான் முற்றிலும் சுதந்திரம் அடைந்துவிட்டேன் என யாராகிலும் உரிமை பாராட்ட முடியுமா? நமக்கு தெரியாமலேயே தீமைக்கு நம்மை இழுத்துச் செல்லும் இந்த வல்லமையிலிருந்தல்லவா நமக்கு உண்மையில் சுதந்திரம் வேண்டியிருக்கிறது? பாவ வல்லமைக்கு கீழ்ப்பட்டிருக்கும் இந்த நிலைமையில் நாம் தொடருவோமானால் கடைசியில் நாம் நித்திய மரணத்தை அதாவது நரகத்தைத்தான் சென்றடைவோம்.

நரகம் என்பது பிசாசின் உறைவிடமாய் இருக்கிறது. சாபக்கேடான இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற மனிதர்கள் காலாகாலமாக பலவித முயற்சிகள் செய்திருக்கிறார்கள் என்பதுதான் வரலாறு. சேற்றில் அமிழ்ந்திருப்பவன் அங்கிருந்து தப்பிக்க தன் தலைமுடியைத் தானே பிடித்துத் தூக்குவது போல், அந்த முயற்சிகளெல்லாமே வீணாய் போயிற்று.